வணிகவியல் 12th Std. அத்தியாயம் 4 நிதிச் சந்தை ஓர் அறிமுகம்

நிதி சந்தை– ஓர் அறிமுகம்-பொது வறையறு நிறுமங்கள் தங்களின் நிதித் தேவையை பெற்றுக்கொள்ள நிதிசந்தை துணை புரிகிறது. முதலீட்டாளர்கள் தங்கள் உபரி நிதியை நிதிசந்தையில் முதலீடு செய்து வருவாயை பெருக்கிகொள்ளமுடியும்.

1.இந்திய நிதிமுறையில் ஈடுபடுபவர்கள் யார்?

1 அமைப்பு நிறுவனங்கள் 2.அமைப்புசாரா நிறுவனங்கள்

2.அமைப்பு நிறுவனங்கள் எவை?

1.ஒழுங்காற்று நிறுவனங்கள் .2நிதி நிறுவனங்கள் .3நிதிசந்தை 4.நிதிசார் சேவைகள்.

3. ஒழுங்காற்று நிறுவனங்கள் என்றால் என்ன ?

இந்திய நிதி முறையைக் கட்டுப்படுத்துகின்றஅமைப்புகள் ஒழுங்காற்று நிறுவனங்கள் எனப்படும்

ஒழுங்காற்று நிறுவனங்கள்.-சில உதாரணங்கள்

1.RBI-இந்திய ரிசர்வ் வங்கி--.இந்திய வங்கிகளின் கட்டமைப்பினை ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

2.IRDAI இந்தியாவிலுள்ள காப்பீட்டுநிறுவனங்களை மேற்பார்வை செய்யும்அமைப்பு.

3.SEBI.இந்திய பங்கு சந்தையின் வளர்ச்சிக்காக பங்கு மாற்றகங்களின் செயல்களை கட்டுப்படுத்தும் ஒருசுதந்திரமான அமைப்பு.

4.நிதி நிறுவனங்கள் பற்றிக் குறிப்பு வரைக.

பொதுமக்களிடம் வைப்புகளை பெற்று கடன் வசதி அளிக்கும் நிறுவனங்கள்..வைப்புதாரர்களுக்கு வட்டி வழங்கும். .வங்கிகள் போன்று செயல்படும்

5.நிதி நிறுவனங்கள்—எடுத்துக்காட்டு தருக.

1.SHRIRAM CITY UNION FINANCE LTD. 2.SUNDARAM FINANCE LTD. 3.CHOLAMANDALAM FINANCE LTD.

6.நிதிசார் சேவைகள் என்பது எதைக்குறிக்கும்?

காப்பீடு,பரஸ்பரநிதிமுதலீடு,,(Mutualfund)வங்கிசேவைகள்(Bankingservices)போன்றவைநிதிசார் சேவைகள் எனப்படும்.

7.அமைப்பு சாரா நிறுவனங்கள் எவை?

1.கடன் வழங்குபவர்கள் 2. நாட்டுப்புற வங்கியர்

8. நாட்டுப்புற வங்கியர் என்பவர் யார்?

தனி நபர்களுக்கு கடன் வசதி அளிப்பவர்கள். இந்திய ரிசர்வ்வங்கியின் கட்டுப்பாட்டில் இல்லாதவர்கள். வங்கிகளின் வளர்ச்சிக்குப் பின் இவர்கள் சேவை குறைந்துள்ளது.

9.நிதிசந்தை என்பது எதைக் குறிக்கும்?

நிதிக்கருவிகள் வியாபாரம் செய்யப்படும் சந்தையை குறிக்கும். பத்திரங்கள்), மற்றும் நிதி சொத்துக்கள்)

10.நிதிசந்தையின் பொருள் தருக

உபரிநிதியையக்கொண்டு நிதிப்பற்றாக் குறையைப் போக்க கடன் நிதி உருவாக்கப்படுவது நிதிசந்தை ஆகும்

11.நிதிசந்தையால் பயன் பெறும் நபர்கள் அல்லது அமைப்புகள் யார்?

1.தனி நபரகள் .2விவசாயத் துறை 3.தொழிற்துறை 4.சேவைத்துறை.

5.நிதி நிறுவனங்கள் (வங்கிகள், காப்பிடுத்துறை) 6.அரசு

12. நிதிசந்தையின் வாயிலாக நிறுவனங்கள் பெறும் நன்மைகள் யாவை?

குறுகிய கால நிதி மற்றும் நீண்டகால நிதியை பெறுகின்றன.
நாட்டின் பொருளாதார வளர்ச்சி மேம்படுகிறது.
13.நிதி சந்தைகளின் வகைகள்யாவை?
1.நிதி கோருதல் அடிப்படையில் 1.கடன் சந்தை 2.சமநிலை பங்குச் சந்தை
2.நிதி கோருதலின் முதிர்வு அடிப்படையில் 1.பண சந்தை 2.மூலதன சந்தை
3.நிதி கோருதலின் வெளியீட்டுக் கால அடிப்படையில் 1.முதல் நிலை சந்தை 2.இரண்டாம் நிலைச் சந்தை
4.நிதி கோருதலின் வழங்கலின் கால அடிப்படையில் 1.ரொக்கம் அல்லது உடனடிச்சந்தை 2.முன்னோக்கிய அல்லது எதிர்கால சந்தை
5.நிதிசந்தை அமைப்பின் அடிப்படையில் 1.பரிமாற்றக வர்த்தகச் சந்தை 2.உடனடிச் சந்தை
14.கடன் சந்தை என்றால் என்ன?
கடன் கருவிகள் வர்த்தகம் செய்யப்படும் சந்தை கடன் சந்தை எனப்படும்.
கடன் கருவிகளுக்கு—உதாரணம் .1அரசு பத்திரங்கள் அல்லது பிணையங்கள்
2.நிறும கடனிட்டுப்பதிரங்கள்
15.சமநிலை பங்கு சந்தை என்றால் என்ன?
நிறுமச் சமநிலை பங்குகள் வர்த்தகம் செய்யப்படும் சந்தை.
16.பணச் சந்தை விளக்கம் தருக.
குறுகிய கால நிதி கோருதலுக்கான சந்தை பணச் சந்தை எனப்படும்.(ஒரு ஆண்டு)
17.பண சந்தையில் கையாளப்படும் நிதிகருவிகள் எவை?
கருவூலச் சீட்டுக்கள் ..பொதுமக்களிடமிருந்து அரசு நிதி திரட்ட வெளியிடும் சீட்டுக்கள்.(இவை T-BILLS என அழைக்கப்படும். 2.இவை தள்ளுபடியில் வெளியிடப்படும் முதிர்வின் போது முக மதிப்பில் பணம் கொடுத்து அரசு மீட்டுக்கொள்ளும். Rs.100 முக மதிப்புள்ள சீட்டுக்கள் Rs.95க்கு வெளியடப்படும் .
2வணிகத்தாள்கள். பெரிய. நிறுவனங்கள் தங்களின் குறுகிய கால நிதித் தேவைக்காக வெளியிடும் ஒரு கடன் ஆவணம். முதிர்வு அதிக பட்சம்:270 நாட்கள்
3.வைப்புசான்றிதழ்கள்.ஒருகுறிப்பிட்டதொகையைகுறிப்பிட்டகாலத்திற்குவைப்புசெய்வது நிலை வைப்பு ஆகும். வங்கிகள் இதனை ஏற்கும்வங்கிகள் வைப்புகளை .
.ஏற்றுக்கொண்டதற்க்கு சான்றாக வழங்கும் இரசீது.
18.மூலதன சந்தை என்றால் என்ன?
நீண்ட கால நிதி கோருதலுக்கான சந்தை.(ஒரு ஆண்டுக்கு மேல்) . பங்குகள் கடனிட்டுப்பதிரங்கள் கையாளப்படும்.
19.முதல் நிலைச் சந்தை என்றால் என்ன?
நிறுமங்கள் முதன் முதலில் பத்திரங்களை வெளியிட்டு முதலினைத் திரட்டுவது .பணம் முதலீட்டாளர்களிடமிருந்துநேரிடையாக நிறுமத்திற்கு செல்லும் .பொது நிறுமங்கள் வழக்கமாக பின்பற்றும் நடைமுறை. பங்குதாரர் நிறுமத்தில் நேரிடையாக முதலாவதாக இணைகிறார்.
20..**இரண்டாம் நிலை சந்தை விளக்கம் தருக**.
ஏற்கனவே வெளியடப்பட்ட பங்குகளுக்கானசந்தை.இதில் பங்குமாற்றகம் ஒரு முக்கிய நிறுவனம்.

வணிகவியல் 12th Std. அத்தியாயம் 4 நிதிச் சந்தை ஓர் அறிமுகம்

21.ரொக்கம் அல்லது உடனடி சந்தை—விவரி
1.தீர்வு உடனடியாக நடைபெறும் சந்தை.2 பத்திரங்கள் மற்றும் ரொக்கம் உடனடியாக பரிமாற்றம் ஆகும்.
22.எதிர்கால சந்தை என்பது எதைக்குறிக்கும்?
1.விலை உடனடியாக முடிவு செய்யப்படும்.
2.ரொக்கம் செலுத்துவது மற்றும் பத்திரம் வழங்குவது எதிர்காலத்தில் நடைபெறும்.
23.பரிமாற்றக வர்த்தகசந்தையின் பொருள் தருக.
பங்கு மாற்றகத்தில்நடைபெறும் பத்திர சந்தை.ஒரே ஒழுங்கு நடைமுறைகளைக் கொண்டது.
24.உடனடி சந்தை என்பது எதைக்குறிக்கும்?
பங்கு மாற்றகத்திற்கு வெளியில் நடைபெறும்.வழக்கமான நடைமுறைகள் கொண்ட பரவலாக்கப்பட்ட சந்தை.
25.பங்கு மாற்றகம் என்பது எது?
பத்திரச்சந்தையில் ஒழுங்கு நடைமுறைகளைக் கொண்ட மைய அமைப்பு. இந்தியாவில் செயல்படும் பங்கு மாற்றகங்களின் எண்ணிக்கை 21. இந்தியாவில் செயல்படும் பங்குச் சந்தைகளில் முக்கியமானவை. 1.தேசிய பங்கு சந்தை(NSE) 2.மும்பை பங்கு சந்தை)BSE)
26.நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு நிதிசந்தையின் பங்கு பற்றி விவரி
. **1.சேமிப்பைப் பெருக்குதல்**தனி நபர்கள்-,நிறுவனங்கள்,மற்றும் அரசிடமிருந்து உபரி நிதியைப் பெற துணை புரிகிறது.
2.**முதலீடுகளை உருவாக்குவது**—நிதி முதலீடுகளை வசூலித்து தேவைப்படுவோற்கு வழங்குகிறது.
3.**தேசிய வளர்ச்சி மேம்பாடு**---உபரி நிதியை ஆக்கப்பூர்வ வழியில் பயன்படுத்த வகை செய்வதால் தேசிய வளர்ச்சி சாத்தியமாகிறது.
4.தொழில் முனைவோர் வளர்ச்சி---புதிய தொழில் முனைவோர்களுக்கு நிதி கிடைக்கவகை செய்வதால் அவர்களின் தொழில்வளர்ச்சி மேம்படுகிறது.
5..தொழில்துறை மேம்பாடு---ஒருநாட்டின் துரித வளர்ச்சி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு நிதிசந்தையின் பணிகள் துணை புரிகிறது..மக்களின் வாழ்கைத்தரம் உயருகிறது.
27.நிதிசந்தையின் பணிகள் யாவை?
1.இடை நிலையர் சார்ந்த பணிகள். 2.நிதி சார்ந்த பணிகள்.
28.இடைநிலையர் சார்ந்த பணிகளைக் குறிப்பிடுக.
1.வளஆதாரங்களின் பரிமாற்றம். 2.வருவாயை அதிகரித்தல். 3.ஆக்கபூர்வ பயன்பாடு. 4.மூலதன உருவாக்கம் . 5.விலை நிர்ணயம் 6.விற்பனை வழிமுறைகள். 7.தகவல்கள்
29.இடைநிலையர் சார்ந்த பணிகள்விளக்கம்---
1.வள ஆதாரங்களின் பரிமாற்றம்..--கடன் பெற இருப்பவர்கள் நிதியை பெற முடியும்.
2.வருவாய்அதிகரித்தல்-- கடன் வழங்குபவர்கள் வட்டி, பங்காதாயம் ஈட்ட முடியும்.
3.*ஆக்கபூர்வ பயன்பாடு.*---வருமானம் மற்றும் தேசிய உற்பத்தி அதிகரிக்கும்.
4.மூலதன உருவாக்கம்.--- நிதிசந்தைகள், சேமிப்பு மூலம் நாட்டின் மூலதன உருவாக்கம் உயர வகை செய்கிறது.

5.விலை நிர்ணயம்.---வாங்குபவர்கள் விற்பனை கலந்துரையாடல் மூலம் நிதி சொத்துக்களின் விலை நிர்ணயம் செய்ய இது உதவுகிறது.
6.விற்பனை வழி முறைகள்.--முதலீட்டாளர்கள் எளிதில் நிதி சொத்துக்களை விற்க முடியும்.
7.தகவல்கள்.....நிதிசந்தைதொடர்பானஅனைத்துதகவல்களையும்(விலை,தேவை,அளிப்பு, நிறும இலாபம்) அதில் ஈடுபடுவோர் பெற முடியும்.

30.நிதிசந்தையின் நிதிசார்ந்த பணிகள்

1.கடன்வாங்குபவர்களுக்கு நிதியை வழங்குகிறது. கடன் வாங்குபவர்கள் முதலீட்டு திட்டங்களை செல்படுத்தமுடியும் .**2.**கடன் வழங்குபவர்கள் சொத்துக்களையும் அதன் மூலம் செல்வதையும் ஈட்ட முடியும் . 3.நீர்மைத்தன்மை இருப்பதால் நிதியை எளிதில் வணிகம் செய்ய முடியும்.

31.முதல் நிலைச் சந்தை இரண்டாம் நிலைச்சந்தை வேறுபடுத்துக.

எண்	ஒப்பீடு	முதல் நிலை சந்தை	இரண்டாம் நிலை சந்தை
01	பொருள்	புதிய பங்கு விற்பனை	பழைய பங்கு விற்பனை
02	நடைபெறும்முறை	நேரிடையாக	மறைமுகமாக
03	நிதி	நிறும விரிவாக்கத்திற்கு	முதலீட்டாளர்களுக்கு
04	எத்தனை முறை	ஒரே முறை	பல முறை
05	நபர்கள்	நிறுமம் மற்றும் முதலீட்டாளர்கள்	முதலீட்டாளர்கள் மற்றும் முதலீட்டாளர்கள்
06	ஆதாயம் பெறும் நபர்	நிறுமம்	முதலீட்டாளர்கள்
07	விலை	நிலையானது	தேவை மற்றும் அளிப்பை பொறுத்து மாறும்
08	இடைநிலையர்கள்	ஒப்புறுதியாளர்கள்	தரகர்கள்
09	அமைப்பு வேறுபாடு	குறிப்பிட்ட புவியியல் இடம் இல்லை	இதற்கு புற அமைப்பு உள்ளது.

32.புற அமைப்பு சொத்துக்கள் என்பது எதைக்குறிக்கும்?

1.நுகர்வுக்கு பயன்படும் சொத்துக்கள் புற அமைப்புசொத்துக்கள் எனப்படும்...2 நிலம் ,கட்டிடம்,தங்கம், வெள்ளி. போன்ற சொத்துக்கள்.

33.புற அமைப்பு சொத்து நிதி சொத்தாக மாற வாய்ப்பு ஏற்படுமா?எவ்வாறு?

வாய்ப்பு ஏற்படும்..குடிஇருப்புக்காக கட்டிடம் வாங்கப்பட்டால் அது புற அமைப்பு சொத்து. அக் கட்டிடம் வாடகைக்கு விடப்பட்டால் அது நிதி சொத்தாக மாறும்.

34.சந்தைப்படுத்தப்படும் சொத்துக்கள் என்பவை எது?

ஒரு நபரிடமிருந்து மற்றவருக்கு எளிதாக மாற்றப்படும் சொத்துக்கள் சந்தைப்படுத்தப்படும் சொத்துக்கள் எனப்படும். எடுத்துக்காட்டுகள். பங்குகள், அரசுப்பத்திரங்கள் .

35.சந்தைப்படுத்தப்படாத சொத்துக்கள் என்பவை எவை? எளிதில் மாற்றமுடியாத சொத்துக்கள் , சந்தைப்படுத்தப்படாத சொத்துக்கள் எனப்படும். வங்கி வைப்புகள், சேமநல வைப்புகள், ஓய்வுதிய நிதிகள், காப்பீடுகள் ,தேசிய சேமிப்புப் பத்திரங்கள் போன்றவை.

12th Std. வணிகவியல் பாடம் 5: மூலதனச் சந்தை

1. மூலதன சந்தை: நீண்ட கால நிதிகளான கடன் மற்றும் பங்கு முதலைத் திரட்டுவதர்க்கான சந்தை. முதலீடு செய்வதற்கு வசதிகளை அளிக்கும் சந்தை.

2. மூலதனச் சந்தையின் பணிகள்: 1.சேமிப்புகளை உருவாக்குதல்.
2.வணிகம் ,மற்றும் உற்பத்தி சார்ந்த முதலீடுகளுக்கு நிதி அளிப்பது.
3.சேமிப்பை ஆக்கப்பூர்வமான வழியில் பயன்படுத்துதல்
4.பொருளாதார வளர்ச்சி மேம்பட வகை செய்தல்

3. மூலதனச் சந்தை சார்ந்த அமைப்புகள்:
1.வளர்ச்சி வங்கிகள். 2.வணிக வங்கிகள் 3.பங்கு மாற்றகங்கள்

4. சீரிய மூலதன சந்தை:
நியாயமான செலவில் நிதி கிடைக்கும் சந்தையே சீரிய மூலதன சந்தை எனப்படும்.

5. மூலதனச் சந்தை வரைவிலக்கணம்
அருண்.கே.தத்தா அவர்கள் கூற்றுப்படி, மூலதனச் சந்தை என்பது பல்வேறு வகையான ஆதாயங்களின் தேவை மற்றும் அளிப்பிற்கு இடையே நிறுவன முதலீடுகள் மற்றும் செல்பாடுகளின் ஒரு கலவையே என வரையறுக்கப்படுகிறது.

6.மூலதனச் சந்தை பொருள்: தனி நபர்கள் மற்றும் பொது வரையறு நிறுமங்கள் முறையே தங்களின் முதலீட்டினை அளிப்பதும் மற்றும் பெறுவதற்குமான சந்தை.

7. மூலதனச்சந்தையின் சிறப்பியல்புகள்: 1.பத்திரங்களின் சந்தை 2 விலை.
3 பங்கேற்பாளர்கள். 4 இடவமைப்பு. 5.நிதி சார்ந்த சொத்துக்களின் சந்தை.

8. மூலதனச்சந்தையின் சிறப்பியல்புகள் – விவரி
1.பத்திரங்களின் சந்தை: பத்திரங்கள், கடனீட்டுப்பத்திரங்கள் கையாளப்படுகிறது. எனவே இது பத்திரங்களின் சந்தை எனப்படுகிறது. **2.விலை:** பத்திரங்களின் விலை, தேவை மற்றும் அளிப்பை பொறுத்து தீர்மானிக்கப்படுகிறது. **3.பங்கேற்பாளர்கள்:** தனிநபர்கள், நிறுமங்கள், அரசு, வங்கிகள், மற்றும் இதர நிதி நிறுவனங்கள் இதில் ஈடுபடுவார்கள். **4.இட அமைவு:** குறிப்பிட்ட எல்லைக்கு உட்பட்ட இடம் அவசியம் இல்லை. பங்கு மாற்றகம் சிறந்த இடம். **5.நிதிசார்ந்த சொத்துக்களின் சந்தை:** நீண்ட கால நிதி சார்ந்த சொத்துக்களுக்கான சிறந்த சந்தை மூலதனச் சந்தை ஆகும்.

9.மூலதனச் சந்தையின் வகைகள்: 1.முதல் நிலை சந்தை .2.இரண்டாம் நிலை சந்தை.

10. முதல் நிலை சந்தை: இது புதிய வெளியீடுகளுக்கான சந்தை. நிறுமம் பொதுமக்களுக்கு வெளியிடும் பத்திரங்களைக் கையாளுகிறது.

11. முதல்நிலை சந்தையில் நிறுமம் பின்பற்றும் வழிகள்:
1.பொது வெளியீடு 2 .உரிமை வெளியீடு. 3. தனியார் வெளியீடு.

12. பொது வெளியீடு: நிறுமங்கள் பொது மக்களுக்கு பத்திரங்களை விற்பனை செய்து மூலதனம் திரட்டுவது பொது வெளியீடு எனப்படும் இம்முறையைப் பொதுநிறுமங்கள் பின்பற்றும்.

13. உரிமை வெளியீடு: நிறுமம் கூடுதல் முதல் திரட்டும் போது தனது பங்குதாரர்களுக்கு முதலில் பங்குகளை ஒதுக்கீடு செய்வது உரிமை வெளியீடு என்ப்படும்.

14. தனியார் வெளியீடு: ஒரு சிறு குழு முதலீட்டளர்களுக்கு விற்பனை செய்யும் முறை.

15. இரண்டாம் நிலை சந்தை: ஏற்கனவே வெளியிடப்பட்ட பத்திரங்களின் மறு விற்பனை நடைபெறும் சந்தை இரண்டாம் நிலை சந்தை எனப்படும். இரண்டாம் நிலை சந்தையில் பங்கு மாற்றகம் மற்றும் உடனடி மாற்றகம் ஆகிய இரண்டும் முக்கிய பங்கு வகிக்கிறது.

15A. மூலதனச் சந்தையின் பணிகள் மற்றும் முக்கியத்துவம்: 1.சேமிப்பு மற்றும் மூலதன உருவாக்கம் 2. நிலை மூலதனம். 3.தொழிற்துறை வளர்ச்சி 4. உடனடி மற்றும் தொடர்ச்சியான சந்தை. 5.செயல் திறனுக்கு நம்பகமான வழிகாட்டி 6.நிதிகளை உரிய திசையில் ஆற்றுப்படுத்துதல் 7. மூலதனச் சந்தையின் பல்வேறு இதர சேவைகள்

15B. மூலதனச் சந்தையின் பணிகள் மற்றும் முக்கியத்துவம்-----விவரி 1. சேமிப்பு மற்றும் மூலதன உருவாக்கம் : மூலதனச் சந்தை தனி நபர், நிறுமங்கள், மற்றும் அரசிடமிருந்து சேமிப்பை திரட்ட உதவி செய்கிறது. **2. நிலை மூலதனம்:** பங்கு மாற்றகம் முதலீட்டாளற்களுக்குப் பத்திரங்களை வாங்க விற்க வாய்ப்பு அளிப்பதால் நிறுமத்திற்கு நிலை முதல் கிடைக்கும். **3. தொழிற்துறை வளர்ச்சி:** நிறுமப் பத்திரங்களில் முதலீடு அதிகம் கிடைப்பதால் தொழிற்துறை வளர்ச்சி சாத்தியமாகிறது. **4. உடனடி மற்றும் தொடர்ச்சியான சந்தை:** பத்திரங்களில் முதலீடு செய்வதில் எளிமை மற்றும் நீர்மைத்தன்மை இருப்பதால் உடனடி மற்றும் தொடர்ச்சியான சந்தைக்கு வாய்ப்பு உள்ளது. **5. செயல் திறனுக்கு நம்பகமான வழிகாட்டி:** மூலதனக் சந்தை நிறுமங்களின் செயல் திறன் மற்றும் நிதி நிலைக்கு நம்பகமான வழிகாட்டியாகத்திகழ்கிறது. **6. நிதிகளை உரிய திசையில் ஆற்றுப்படுத்துதல்:** பத்திரங்களின் நடப்புச் சந்தை விலை, மற்றும் வருவாய் காரணமாக பொதுமக்கள் தங்கள் உபரி நிதியை முதலீடு செய்ய ஒரு குறிப்பிட்ட தேர்ந்தெடுக்க முடியும். **7. மூலதனச் சந்தையின் பல்வேறு இதர சேவைகள்:** மூலதனச் சந்தை தொழில் முனைவோர்க்கான நீண்ட கால மற்றும் மத்திய கால கடன் வழங்குதல், ஒப்புறுதி வழங்குதுல், நிறுமத் தோற்றுவிப்பில் உதவுதல், நிபுணர்களின் அறிவுரை வழங்குதுல், போன்ற சேவைகளை வழங்குகிறது. **8. பின் தங்கிய பகுதிகளை மேம்படுத்துதல்:** பின் தங்கிய மற்றும் கிராமப்புற பகுதிகளின் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நீண்ட கால நிதி வழங்குகிறது. **9. அயல் நாட்டு மூலதனம்.:** மூலதனச் சந்தை அயல் நாட்டு மூலதனத்தை திரட்ட உதவி புரிகிறது. அதன் வாயிலாக அந்நியத் தொழில் நுட்பமும் வருகிறது. **10. எளிய நீர்மைத்தன்மை:** இரண்டாம் நிலைச் சந்தையில் பத்திரங்களை விற்று ரொக்கம் பெற முடிகிறது.

16. இந்திய மூலதனச் சந்தையின் தோற்றம் மற்றும் வளர்ச்சி---விவரி

1.**1947 முதல் 1973** வரை --- மூலதனச் சந்தையின் கட்டமைப்புக்கான வளர்சிக் காலம். நிதி நிறுவனங்கள் **IFCI,ICCI,IDBI,UTI,SFCs, SDCs**, போன்றவை உருவாக்கப்பட்டன.

2. **1980 to 1982** வரையிலான காலம் முதன்மைச் சந்தையில் கடனீட்டுப்பத்திரம் சக்தி வாய்ந்த ஆவணமாக செயல்பட்டது.

3. **1992ல்** முதன்மைச் சந்தை மற்றும் இரண்டாம் நிலைச் சந்தைகளை ஒழுங்குபடுத்த **SEBI** உருவாக்கப்பட்டது. கடன் மதிப்பீட்டு முறை **(credit rating)** அறிமுகப்படுத்தப்பட்டது. இரண்டாம் நிலைச் சந்தையின் வேலைகளை மறு சீரமைப்பு மற்றும் மதிப்பீடு செய்து ஆலோசனை வழங்க பல குழுக்கள் உருவாக்கப்பட்டன.

17. புதிய நிதி நிறுவனங்கள்: தொழிற்சாலைகளின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்ய புதிய நிதி நிறு வனங்கள்தோற்றுவிக்கப்பட்டன.

18. துணிகர நிதி நிறுவனம்: புதிய திட்டம் மற்றும் கண்டுபிடிப்பிற்கு நிதி வழங்குவதர்க்காக உருவாக்கப்பட்டது. துணிகர மூலதனம் என்பது தொழில் நுட்ப திட்டங்களை வணிகமயமாக்குவதர்க்குத் தேவையான நிதியினைக் குறிக்கும்.

19 . துணிகர மூலதன நிதிக்கு எடுத்துக்காட்டு:

1. ICICI யின் ஆபத்து மூலதனம். 2. IDBI யின் துணிகர நிதி. 3. SIDBIN யின் தொழில் நுட்ப வளர்ச்சி. 4. இந்திய கட்டமைப்பு நிறுவனம்.(TDICT)

20. பரஸ்பர நிதி: சிறு முதலீட்டாளர்களின் சேமிப்புகளை பெரிய முதலீடாக மாற்றும் நிதி நிறுவனங்கள் பரஸ்பர நிதி நிறுவனங்கள் எனப்படும் பங்குதாரர்களிடமிருந்து பெற்ற நிதியினை முதலீடு செய்து அதில் கிடைக்கும் வருவாயை முதலீட்டாளர்களுக்கு வழங்குகிறது.

21. பரஸ்பர நிதியில் ஈடுபடும் நிறுவனங்கள்: 1. LIC 2. UTI 3. SBI. 4. Canara Bank.

22. பரஸ்பர நிதியின் நன்மைகள்:

1.அதிக வருவாய் 2.நெகிழ்வு தன்மை 3.பாதுகாப்பு 4.வரி விலக்கு

23. ஏட்டுக்கடன் தரகு முகமை நிறுவனங்கள்: விற்பனை மூலம் பெற வேண்டிய தொகையின் அடிப்படையில் நிதி நிறுவனங்கள் வழங்கும் நிதி ஏற்பாடே ஏட்டுக்கடன் தரகு முகமை ஆகும்.

24. ஏட்டுக்கடன் முகமையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள். –எடுத்துக்காட்டுகள் தருக.

1.SBI மற்றும் வணிக சேவைகள் 2. கான்பேங்க் பேக்டரிங் லிமிடெட்.

25. இந்திய உடனடி பங்கு மாற்றகம் பற்றி நீவிர் அறிவது யாது?

பங்குகளை இந்தியா முழுவதும் மின்னணு மூலம் வியாபாரம் செய்யும் நோக்கோடு முதன்மை நிதி நிறுவனங்களால உருவாக்கப்பட்ட அமைப்பு.

26. OTCEI யின் நன்மைகள்: 1.வெளிப்படைத்தன்மை 2.விரைவானமுடிவு 3.நெகிழ்வு தன்மை

27. இந்திய தேசிய பங்கு மாற்றகம் லிமிடெட்:

1992ம் ஆண்டு பங்குச் சந்தையின் மாதிரியாக உருவாக்கப்பட்டது. பங்குகளை மின்னணுபங்குகளாக (DEMAT) மாற்றி வியாபாரம் செய்ய வகை செய்கிறது.

28. தேசிய தீர்வக மற்றும் களஞ்சிய அமைப்பு: பங்கில்லா வணிக முறையில் கீழ் பத்திரங்களின் தீர்வுகள் அனைத்தும் பதிவேட்டின் மூலம் நடைபெறும் தேசிய தீர்வக மற்றும் களஞ்சிய அமைப்பு நான்கு அமைப்புகளைக் கொண்டுள்ளது.

1.மத்திய காப்பகம் 2.பத்திர பதிவாளர் 3.தீர்வக அமைப்பு 4.காப்பக பங்கேற்பாளர்கள்.

29. மத்திய காப்பகம்: அனைத்து பங்குதாரர்களின் பத்திரங்களையும் (shares) மின்னணு முறையில் (Electronic Format) பாதுகாக்கும் அமைப்பு.

30. பத்திரப் பதிவாளரின் பணி: பத்திரங்கள் வெளியிடுவதைக் கட்டுப்படுத்தும் அமைப்பு.மேலும் பத்திர விற்பனையின் போது பத்திர உரிமை மாற்றத்தை நிர்வகிக்கும்.

31. தீர்வக அமைப்பின் பணி: பத்திரங்களை வாங்குபவர் மற்றும் விற்பவருக்குச் சேர வேண்டிய பணத்தை செலுத்துகிறது.

32.இந்திய பங்கு வைப்பு கழகம் லிமிடெட்: பங்கு சந்தையில் பத்திரவைப்பாக செயல்படும் அமைப்பு. அதிக நீர்மைத்தன்மை கொண்ட சந்தை. ஒருநாள் வர்த்தகம் 5 டிரில்லியன் டாலர்.

33. பண்டக சந்தை: 50 முக்கிய பண்டகசந்தைகளுக்கிடையே முதல் நிலைப் பொருட்கள் வர்த்தகம் செய்யப்படும் சந்தை.

34. கடின பொருட்களின் சந்தை: பூமியிலிருந்து தோண்டி எடுக்கப்படும் பொருட்களுக்கான சந்தை. (தங்கம், இரும்பு, எண்ணெய், தாதுப் பொருட்கள்).

35. மென்பண்டக சந்தை: விவசாயம் சார்ந்த முதல் நிலைப் பொருட்களுக்கான சந்தையைக் குறிக்கும். (கோதுமை,பருத்தி,சர்க்கரை மற்றும் காபி)

36. வருவிக்கப்பட்ட சந்தை சில அடிப்படை சொத்துக்களின் மதிப்பு மற்றும் விலையில் ஏற்படும் மாற்றத்தைக் கணக்கில் கொண்டு இரண்டு நபர்களுக்கிடையே ஏற்படும் ஒப்பந்தமே வருவிக்கபப்பட்ட சந்தை எனப்படுகிறது.

37. அடிப்படை சொத்துக்கள்:

1.பத்திரங்கள். 2.பிணையங்கள் 3.வட்டிவிகிதம் 4.சந்தை குறியீடு.

38. தங்க முலாம் மூலதன சந்தை: அரசு பத்திரங்களுக்கான சந்தையே தங்க முலாம் மூலதன சந்தை எனப்படுகிறது.

39. தங்க முலாம் மூலதன சந்தையின் சிறப்பியல்புகள்:

1. முதலீடுகள் மீது உத்திரவாத வருமானம்
2. ஊக வணிகம் இல்லை
3. மதிப்பில் நிலைத்தன்மை.
4. அதிக அளவு பரிவர்த்தனைகள்.

வணிகவியல்
பாடசாலை

Padasalai TrbTnpsc

பணச் சந்தை. முற்றிலும் குறுகிய கால நிதிகளுக்கான ஒரு சந்தை பணச் சந்தை எனப்படும். கையாளப்படும் பத்திரங்களின் முதிர்வு காலம் அதிகபட்சம் 1 வருடம்.

1. **பணச் சந்தையில் கையாளப்படும் கருவிகள் எவை**?

1.கருவூலச் சீட்டுக்கள் .2வணிக இரசீதுகள் 3.வைப்பு சான்றிதழ்கள்

2. பணச் சந்தை வரைவிலக்கணம்.

குரோத்தரின் கூற்றுப்படி, "பல்வேறு அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் பணத்திற்கு நிகரான பல்வேறு ஆவணங்களைக் கையாளும் மொத்த அமைப்பிற்கான கூட்டுப் பெயராகும்."

இந்திய ரிசர்வ் வங்கி, "குறுகியகால நிதி சொத்துக்களுக்கான சந்தையே பணச் சந்தை ஆகும். மேலும் முதன்மை சந்தையில் புதிய ஆதாரங்களுக்கான பணப் பரிமாற்றத்தை எளிதாக்குகிறது. இரண்டாம் நிலை சந்தையில் ஏற்கனவே வழங்கப்பட்ட நிதி கோரிக்கைகளுக்கும் நிதி அளிக்கிறது" என வரைவிலக்கணம் வழங்குகிறது.

3.பணச் சந்தையின் நோக்கங்கள் யாவை?

1.குறுகிய கால உபரி மற்றும் பற்றாக்குறையைத் தீர்த்து ஒரு சமநிலை முறையை வழங்குதல்.

2.மத்திய வங்கியின் தலையீடானது நிறுவனத்தின் பணப்புழக்கத்தை பாதிக்கும் மைய புள்ளியை வழங்குதல்.

3.குறுகிய கால பணத்தை பயன்படுத்தும் பயனாளர்களுக்கு நியாயமான விலையில் உரிய பயன்பாட்டை வழங்குதல்.

4.பணச் சந்தையின் சிறப்பியல்புகள் யாவை?

1..குறுகிய கால நிதிச் சந்தை. 2 . முதிர்வுக்காலம் . 3. பணமாகமாற்றுவது.

4.முறையான இடமில்லை. 5.துணைச் சந்தைகள். 6.சந்தையின் பங்கு.

7.மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட வங்கி முறை.

8.இரண்டாம் நிலைச் சந்தையின் தேவை

9.நிதித்தேவைமற்றும் வழங்கல். 10.மொத்த விற்பனைச் சந்தை.

11.நெகிழ்வு தன்மை. 12.மைய வங்கியின் முன்னிலை

5.பணச் சந்தையின் சிறப்பியல்புகளை விவரி.

1.**குறுகிய கால நிதிகள்.** பணச் சந்தையானது குறுகிய கால நிதிகளுக்கு ஒரு சிறந்த சந்தை.

2.**முதிர்வுக்காலம்**. நிதிச் சொத்துக்களின் முதிர்வுக் காலம் ஒரு ஆண்டு.

3. **பணமாக மாற்றுவது**. உடனடியாக நிதிச் சொத்துக்களை பணமாக மாற்ற முடியும். குறைந்த பரிவர்த்தனை செலவு.

4.**முறையான இடமில்லை.** பரிவர்த்தனைகள் தொலைபேசி அல்லது வாய்மொழி மூலமாக நடைபெறும்.

5.**துணைச் சந்தைகள்.** பணச் சந்தை பல துணைச் சந்தைகளின் தொகுப்பாகும்.

6.**சந்தையின் பங்கு.** மத்திய வங்கி, வணிக வங்கிகள், நிதி நிறுவனங்கள், தள்ளுபடியகம் மற்றும் ஏற்பகங்கள் பணச்சந்தையின் கூறுகளாகும்.

7.**மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட வங்கி முறை**. பணச் சந்தையின் பல்வேறு பிரிவுகளுக்கும் மத்திய வங்கிக்கும் இடையே வணிக வங்கிகள் செயல்படுகின்றன.

8.**இரண்டாம் நிலைச் சந்தையின்தேவை**. நிதிச் சொத்து ஆவணங்களுக்கு இரண்டாம் நிலைச் சந்தை தேவைப்படுகிறது.

9.**நிதித்தேவை மற்றும் வழங்கல்**. குறுகிய கால நிதிக்கான தேவை மற்றும் அளிப்பும் அதிகமாக இருக்க வேண்டும்.

10.**மொத்த விற்பனைச் சந்தை**. பணச்சந்தையில் அதிகளவு வர்த்தகம் நடைபெறும். நிதிச்சொத்துக்களின் மதிப்பும் அதிகளவு இருக்கும்.

11.**நெகிழ்வு தன்மை**. நெகிழ்வு தன்மை காரணமாக இச் சந்தையில் புதிய ஆவணங்கள் அறிமுகப்படுத்தப்படும்.

12.**மைய வங்கியின் முன்னிலை**. மைய வங்கி ரொக்க இருப்பு விகிதம் வைத்துக் கொண்டு ஆவணங்ககளைத் தள்ளுபடி செய்வதன் மூலம் தேவையான நிதி வசதியையை ஏற்படுத்தித் தருகிறது.

6.பணச் சந்தை மூலதனச் சந்தை – வேறுபடுத்துக.

தன்மைகள்	**பணச் சந்தை**	**மூலதனச் சந்தை**

நிதியின் காலம்	ஒரு வருடம்	ஒரு வருடத்திற்கு மேல்
நிதி வழங்கல்	அரசின் குறுகிய காலத் தேவை மற்றும் நிறுவன நடைமுறை முதலுக்கு.	அரசின் நீண்ட காலத்தேவை மற்றும் நிறுவன நிலை முதல் தேவைக்கு.
வணிக ஆவணங்கள்	கருவூலச் சீட்டுக்கள் வணிகத்தாள்கள்.	பங்குகள் கடனீட்டுப்பத்திரங்கள்.
பண மதிப்பு	குறைந்தபட்ச மதிப்பு ரூ1,00,000 (கருவூலச் சீட்டு) அதிகபட்ச மதிப்பு ரூ25,00,000 (வணிகத்தாள்.)	பங்கின் குறைந்தபட்ச மதிப்பு ரூ10/- அதிகபட்ச மதிப்பு ரூ100/-
நிறுவனங்களின் பங்கு	மைய வங்கி, வணிக வங்கிகள்.	மேம்பாட்டு வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள்.
ஆவணங்கள் கிடைக்குமிடம்	இரண்டாம் நிலைச் சந்தையில் இடம் பெறாது	இரண்டாம் நிலைச் சந்தையில் இடம் பெறும்
உட்பிரிவு	இல்லை	முதல் நிலச் சந்தை மற்றும் இரண்டாம் நிலைச் சந்தை.
பரிவர்த்தனை நடைபெறும்இடம்.	வாய்மொழியாக.	பங்கு மாற்றகம்.
இடர்	குறைந்த அளவு	அதிக அளவு
ஒப்புறுதியளித்தல்	முதன்மைப் பணி அல்ல	முதன்மைப் பணி ஆகும்
ஆதிக்கம்	வணிக வங்கிகளின் ஆதிக்கம்	வங்கி அல்லாத நிதி நிறுவனங்களின் ஆதிக்கம்.

7. பணச்சந்தையின் பங்கேற்பாளர்கள் யார்?

1.பல்வேறு நாடுகளின் அரசுகள். 2. பல்வேறு நாடுகளின் மைய வங்கிகள்.
3.தனியார் மற்றும் பொதுத்துறை வங்கிகள் . 4.பரஸ்பர நிதி நிறுவனங்கள்.
5.காப்பீட்டு நிறுவனங்கள். 6.வங்கி அல்லாத நிறுவனங்கள்.
7.இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் பாரத ஸ்டேட் வங்கி. 8.வணிக வங்கிகள்.
9.மாநில வங்கிகள். 10.பொது மக்கள்.

8.பணச் சந்தை ஆவணங்கள் என்பது எதைக் குறிக்கும்?

பணச் சந்தையில் கிடைக்கும் பல்வேறு ஆவணங்களே பணச் சந்தை ஆவணங்கள் எனப்படுகின்றன. 1.கருவூலச் சந்தையில் கிடைக்கும் கருவூலச் சீட்டுக்கள் 2. அழைப்பு கடன் சந்தையில் கிடைக்கும் குறுகிய கால அறிவிப்பு மற்றும் அழைப்புப் பணம். 3.இரசீது சந்தையில் கிடைக்கும் வணிக இரசீதுகள் மற்றும் உறுதிமொழிப் பத்திரங்கள்.
கூடுதல் ஆவணங்கள். 1.வணிகத்தாள்கள். 2.வைப்பு ரசீதுகள். 3.வங்கிகளுக்கு இடையிலான பங்கேற்பு சான்றிதழ்கள். 4.மீள் வாங்கல் வீத ஆவணங்கள்.

9.கருவூல இரசீது சந்தை-குறிப்புவரைக.

கருவூல இரசீதுகளை வாங்கும் மற்றும் விற்கும் சந்தைக்கு கருவூல சந்தை என்றுபெயர். குறிப்பிட்ட காலக்கெடுவுடன் கூடிய கடன் உறுதிப் பத்திரமே கருவூல இரசீதுகள்.
அரசாங்கம் கருவூல இரசீதின் தொகையை அதன் தவணைக் காலத்திற்குள் செலுத்திவிடும் என்ற உறுதிமொழியை அளிக்கிறது.

10. கருவூல இரசீதின் பொதுவான இயல்புகளை விவரி

1.வெளியிடுபவர் . கருவூல இரசீதுகளை அரசாங்கம் வெளியிடுகிறது.
2.நிதி இரசீது. அரசாங்கம் பொதுமக்களிடம் பணத்தைப் பெற்றுக் கொண்டதற்க்கு வழங்கப்படும் இரசீது.
3.நீர்மைத்தன்மை. கருவூல இரசீதுகளைஎளிதாக பணமாக்கமுடியும்.
4.முக்கிய ஆதாரம். அரசாங்கம் பொதுமக்களிடம் பணத்தைப் பெற்றுக்கொண்டதற்க்கு கருவூல இரசீதுகள் ஆதாரமாக விளங்குகிறது.
5.பண மேலாண்மை. பொதுமக்கள் அரசின் கருவூல இரசீதுகளை வாங்குவதன் மூலம் பண மேலாண்மையை பாதுகாப்பாக கையாள முடியும்.

Padasalai TrbTnpsc

11.கருவூல இரசீதுகளின் வகைகளை விவரி.

கால வரையறை அடிப்படையில் கருவூல இரசீதுகள் மூன்று வகைகளாக பிரிக்கப்படுகின்றன . 1.. **91 நாட்கள் கருவூல இரசீதுகள்**. 2. **182 நாட்கள் கருவூல இரசீதுகள்**. 3. **364 கருவூல இரசீதுகள்**.

91 நாட்கள் கருவூல இரசீதுகள். இவை நிலையான 4% தள்ளுபடி விகிதத்தில் வெளியிடப்படுகின்றன.

182 நாட்கள் கருவூல இரசீதுகள். 182 நாட்கள் கருவூல இரசீதுகள் ஒரு வாரம் முழுவதும் வடிகட்டும் அடிப்படையில் வெளியிடப்படுகின்றன.

364 கருவூல இரசீதுகள். 364 கருவூல இரசீதுகள் எவ்விகித நிலையான விகிதமும் கொண்டு வெளியிடப்படுவதில்லை.

12.வைப்புச் சான்றிதழ்கள் பற்றி எழுதுக.

வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களால் வழங்கப்படும் குறுகிய கால வைப்பு ஆவணங்கள். வங்கிகள் தங்களின் நிதி ஆதாரங்களை உயர்த்திக் கொள்ள இவற்றை வெளியிடுகின்றன. குறிப்பிட்ட முகமதிப்பு மற்றும் முதிர்வுத் தொகையைக் கொண்டிருக்கும்.. மாற்றக்கூடிய தன்மை உடையதால் வைப்புச் சான்றிதழ்கள் மாற்றுமுறை ஆவண வைப்புச் சான்றிதழ்கள் எனப்படுகிறது.

13.வெளியீட்டாளர்கள் எனப்படுவர் யார்?

வணிக வங்கிகள், நிதிநிறுவனங்கள் வைப்புச் சான்றிதழ்களை வெளியிடுவதால் வெளியீட்டாளர்கள் என அழைக்கப்படுகிறார்கள்.

14.சந்தாதாரர்கள். வைப்புச் சான்றிதழ்களை வாங்குபவர்கள் சந்தாதாரர்கள் ஆவர். தனி நபர்கள், கழகங்கள், அறக்கட்டளைகள், சங்கங்கள்,வெளிநாடு வாழ் இந்தியர்கள்.

15. வைப்புச் சான்றிதழ்களின் இயல்புகள்.

1.கால வைப்புக்கான உரிமை ஆவணம் .2.பிணையமற்ற மாற்றுமுறை ஆவணம் . 3.வட்டத்தில் வெளியிடப்படுகிறது. 4.மேல் எழுதுதல் மூலம் எளிதில் மாற்ற முடியும் 5. சலுகை நாட்கள் கிடையாது.

16. வணிக இரசீதுகள் என்பது எதைக் குறிக்கும்.

பொருட்களை விற்பவர் வாங்குபவர் மீது எழுதி தயாரிக்கப்படும் ஒரு ஆவணமே வணிக இரசீதுகள் எனப்படும். வணிக இரசீதுகளின் முதிர்வுக் காலம் 30 லிருந்து 90 நாட்கள் வரை இருக்கும்.

17. வணிக இரசீதுகளின் நன்மைகள் யாவை?

1.சுய நீர்மைத் தன்மை. .2.இருநபர்களுக்கிடையே பரிமாற்றம். .3.சரியான முதிர்வு தேதி. .4.வெளிப்படைத் தன்மை கொண்ட நடவடிக்கை..

18. வணிக இரசீதுகளின் இயல்புகள் யாவை?

1.வரைவாளர். 2.ஏற்றுக்கொள்பவர். 3.செலுத்தப் பெறுநர் 4. வட்டம் செய்பவர். 5.மேல் எழுதுபவர். 6.மதிப்பீடு 7.முதிர்வு . 8.கடன் தர மதிப்பீடு.

18. வணிக இரசீதுகளின் வகைகள் யாவை?

1.தேவை மற்றும் பயன்பாட்டு இரசீதுகள்.

2. தூய்மை இரசீதுகள் மற்றும் ஆவண இரசீதுகள்.

3.உள்நாட்டு மற்றும் அயல் நாட்டு இரசீதுகள்.

4.தனித்துவமான இரசீதுகள்.

5.இருப்பிட மற்றும் வழங்கல் இரசீதுகள்.

19.. **வணிக இரசீதுகளின் வகைகளை விவரி.**

1. தேவை மற்றும் பயன்பாட்டு இரசீதுகள். பணம் செலுத்துவதற்கான தேதி குறிப்பிடப்படாத இரசீது, தேவை மற்றும் பயன்பாட்டு இரசீது எனப்படும். இரசீது வைத்திருப்பவர் தனக்கு பணம் தேவைப்படும்போது ரசீதுக்கு பணம் பெற்றுக் கொள்ளலாம்.

2. தூய்மை இரசீதுகள் மற்றும் ஆவண இரசீதுகள். பொருட்களின் உரிமை ஆவணம் மூலம் இணைக்கப்பட்டுள்ள இரசீதுகள் ஆவண இரசீதுகள் எனப்படும். எந்த ஒரு ஆவணமும் எழுதி இணைக்கப்படாத இரசீதுகள் தூய்மை இரசீதுகள் எனப்படும்.(e.g) தொடர் வண்டி இரசீது,சரக்கு இரசீது.

3. **உள்நாட்டு மற்றும் அயல் நாட்டு இரசீதுகள்**. இந்தியாவில் குடியிருக்கும் ஒருவருக்கு இந்தியாவில் எழுதப்பட்ட மற்றும் செலுத்த வேண்டிய இரசீதுகள்.

இந்தியாவிற்கு வெளியே எழுதப்பட்டு இந்தியாவிலோ அல்லது வெளி நாட்டிலோ செலுத்தப்படும் இரசீதுகள்.

4. **தனித்துவமான இரசீதுகள்**. உள்ளூர் வர்த்தகப் பயன்பாட்டின் மூலம் நிர்வகிகப்ப்படும் இரசீதுகள் தனித்துவமான இரசீதுகள் எனப்படும்.

5. **இருப்பிட மற்றும் வழங்கல் இரசீதுகள்.** உண்மையான வியாபார நடவடிக்கைகள் அல்லாமல் உருவாக்கப்படும் இரசீதுகள் இருப்பிட மற்றும் வழங்கல் இரசீதுகள் எனப்படும்.

20. **அரசு அல்லது தங்க முனை பத்திரங்கள் சந்தை**. அரசு பத்திரங்களை வாங்கவும் விற்கவும் கூடிய சந்தை அரசு அல்லது தங்க முனை பத்திரங்கள் சந்தை எனப்படும்.

21. **அரசு பத்திரங்கள் வெளியிடுவதன் நோக்கம்**. 1.முதிர்வு அடைந்த பத்திரங்களை மீட்கவும் , 2.முதிர்வு அடையாத பதிரங்களுக்கு திருப்பிச் செலுத்தி மீட்கவும் 3.ரொக்க நிதிகளுக்காகவும், புதிய ரொக்க வளங்களை உயர்த்துவதர்க்காவும், அரசுப் பத்திரங்கள் வெளியிடப்படுகின்றன.

22. **அரசு அல்லது தங்க முனை பத்திரங்கள் சந்தையின் இயல்புகள் யாவை?**

1.**முகமை.** மத்திய அரசு,மாநில அரசு,நகராட்சிகள்,மாநகராட்சிகள், துறைமுகங்கள் போன்ற அமைப்புகள் அரசுப் பத்திரங்களை வெளியிடுகின்றன.

2. **இந்திய ரிசெர்வ் வங்கியின் சிறப்புப் பணி.** அரசுப் பத்திரங்கள் வாங்குதல் மற்றும் விற்பனையில் இந்திய ரிசெர்வ் வங்கி முக்கிய பங்கு வகிக்கிறது.

3.**பத்திரங்களின் இயல்பு.** பத்திரங்கள் அதிக பாதுகாப்பு தன்மை உடையது.

4. **பணப்புழக்க விபரம்.** அரசுப் பத்திரங்கள் அதிக நீர்மைத்தன்மை கொண்டவை. பணப்புழக்கம் அதிகமாக இருக்கும்.

5. **வரிவிலக்கு.** முதலீட்டாளர்களுக்கு வரி விலக்கு கிடைக்கும். இதனால் அரசுப்பத்திரங்கள் பிரபலம் அடைந்துள்ளது.

6. **சந்தை.** இந்தியாவில் அரசுப் பத்திரங்கள் முதல் மற்றும் இரண்டாம் நிலைச் சந்தைகளில் கிடைக்கும்

7. **படிவங்கள்.** பங்குச் சான்றிதழ்கள், உறுதி மொழி சீட்டுக்கள், மற்றும் கொணர்பவர்கள் பத்திரங்கள் போன்ற வடிவங்களில் அரசுப் பத்திரங்கள் கிடைக்கும்.

8. **பங்கேற்ப்பாளர்கள்.** ஒருங்கிணைந்தபங்கேற்ப்பாளர்களாக மத்திய மாநில அரசுகள் உள்ளன.

9. **வர்த்தகம்.** வங்கிகள் மற்றும் பெரு நிறுவனங்கள் அரசு பத்திரங்களை வாங்கி விற்பதில் ஈடுபடுகின்றன.

10. **வெளியீட்டு இயந்திரம்.** இந்திய ரிசெர்வ் வங்கியின் கீழுள்ள பொது கடன் அலுவலகம் (Public Debt Office) அரசு பத்திரங்களை வெளியிடுகிறது.

11. **அரசு பத்திர வெளியீடு தொடக்கம்.** அரசுப் பத்திர வெளியீடு தொடங்கும் முன்பத்திரங்களின் தன்மைகள் பற்றி அறிவிப்பு வெளியிடப்படும்.

12. **சீர்மைப் படுத்துதல்.** முதிர்ச்சி அடைந்த பத்திரங்களை கையகப்படுத்துதல் மற்றும் மீட்பை எளிதாக்கும் நடவடிக்கையே சீர்மைப்படுத்துதல் ஆகும். RBI இதை மேற்கொள்கிறது.

13. **மாற்றம்.**ஒரு பத்திரத்தினை வாங்குவதற்காக மற்றொரு பத்திரத்தினை விற்பனை செய்ய RBI இரண்டாம் நிலைச் சந்தையில் மேற்கொள்ளும் சந்தை நடவடிக்கையே மாற்றம் ஆகும்.

14. **ஏலம் விடுதல்.** வர்த்தகர்கள் ஒருவர் ஒருவரோடு போட்டியிடும் முறையில் பத்திரங்களை அதிக விலைக்கு விற்கும் வர்த்தக முறையே ஏலம் விடுதல் ஆகும்.

23. **பழமையான பணச் சந்தை.** லண்டன் பணச் சந்தை உலகின் பழமையான மிகவும் வளர்ந்த மற்றும் முன்னணி பணச் சந்தை ஆகும்.

நியூயார்க் பணச் சந்தை இரண்டாவது நன்கு வளர்ந்த சந்தை.